‘‘என்றைக்கு காண்பேனோ என் ஏசு தேவனை’’
என்று செஞ்சுருட்டி ராகத்திலும், ஆதி தாளத்திலும் பாடியுள்ளார்.

இந்த தரிசனம் அவருடைய வாழ்வில் ஒரு பெரிய திருப்பு முனையாக இருந்திருந்தது.

**துதியின் சிறப்பு**

வேதநாயகம் சாஸ்திரியார் பாடிய கீர்த்தனைப் பாடல்கள் இயேசுவின் மேல் நம்பிக்கை அளிக்கும் வகையிலும், இயேசு பெருமானை உண்மையாய் பின்பற்றும் வகையிலும், பாவங்களை உணரவும், பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது.

நம்மையும் துதிக்க அழைக்கும் விதமாக கீர்த்தனையில் 19-ஆம் பாடலை பாடியுள்ளார். ‘‘பாடித்துதி மனமே பரனை கொண்டாடித்துதி தினமே’’ இவருடைய ஒவ்வொரு பாடல்களும் எம்பெருமானை துதிக்கும் விதமாகவும், போற்றும் விதமாகவும் அமைந்துள்ளது. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் தேவாதி தேவனை துதித்துப்பாடுவதே அவருடைய ஆசையாக இருந்தது.

**நன்மை செய்த தேவன்**

தேவாதி தேவன் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பல அற்புதங்களை செய்திருக்கிறார். அதே போல வேதநாயகம் சாஸ்திரியார் வாழ்க்கையிலும் அநேக அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

அவருக்கு குழந்தை இல்லாத போது அவருடைய சகோதிரியின் பெண் குழந்தையை தத்தெடுத்துக் கொண்டார். அக்குழந்தைக்கு ஞானதீபம் என்று பெயரிட்டார்கள். ஒரு நாள் யாழ்பயணத்திற்கு குடும்பத்துடன் படகில் போகும் போது வடகாற்று அடிக்காததினால் படகு ஓட்ட முடியாமல் தடைப்பட்டது. அவருடைய கையில் ஒரு காசும் இல்லை. அவர்களை ஏமாற்றும் விதமாக அந்த படகுக் காரன் பூசை செய்து சாமி கும்பிட்டு, கோணாங்கியடித்தால் தான் படகில் போக முடியும் என்று நாடகமாடினான். ஆனால் அதை சாஸ்திரியார் பொருட்படுத்தவில்லை, ‘‘உன் சாமி பல நாட்கழித்து செய்வதை என் சாமி உடனே செய்வார்’’ என்று கூறி சாஸ்திரியார் வடதிசையை நோக்கி கடவுளிடம் மன்றாடி பாடிக்கொண்டிருக்கும் போதே வடகாற்று அடித்தது. படகுக்காரன் தேவன் செய்த அற்புதங்களை கண்டு திகைத்தான்.

அதேபோல் வாடகை வீட்டில் தங்கியிருந்த பொழுது பணத்திற்கு கஷ்டப்படும் போதும், வறுமையில் இருக்கும் போதும், கலங்கி நிற்கும்

ஒவ்வொரு தருணங்களிலும் அவருடைய உணர்வுகளெல்லாம் அக்கணமே ஒரு பாட்டாய் வெளிப்படும். அவ்வாறு பாடிய பாடலில் ஒன்று

பல்லவி

"நெஞ்சே நீ கலங்காதே; சீயோன் மலையின்
ரட்சகனை மறவாதே; – நான் என் செய்வேனென்று -
நெஞ்சே நீ கலங்காதே.

சரணம்

வினைமேல் வினை வந்தாலும் - பெண்சாதி பிள்ளை,
மித்ரு சத்ருவானாலும்,
மனையொடு கொள்ளை போனாலும், வானம் இடிந்து வீழ்ந்தாலும்
- நெஞ்சமே நீ கலங்காதே'.

கீர்த்தனை 232

அவர் மீட்பின் நற்செய்தி கேட்டு உள்ளங்களித்து, உலக வாழ்க்கை அல்லாது முடிவில்லாப் பேரின்ப வாழ்க்கையை இலக்காக வைத்து வாழ புது உற்சாகங்கொண்டு ஊர் திரும்பினார்.

**வேதநாயகம் சாஸ்திரியார் பாடல்களின் சிறப்பு**

அவருடைய 40 வயதிற்குள் 80 நூல்களை சாஸ்திரியார் இயற்றினார். அவர் இயற்றிய ஒவ்வொரு பாட்டிலும் ஒரு சிறப்பு உள்ளது.

அவருடைய நூல்களிலும், பாடல்களிலும் தாவீதின் பெயரை நாட்டியிருப்பதே சிறப்பு. தாவீதின் பெயரை நாட்டியிருக்க காரணம் அவர்தம் வாழ்வனுபவத்தைச் சுட்டிக் காட்டவே, தாவீதைப் போன்றே சாஸ்திரியாருக்கும் தாம் 'இறைவனுக்கு முன்பாக செய்த பாவ உணர்வு என்றென்றும் இருந்தது. அதைப் போன்றே பாவ மன்னிப்பின் உறுதியையும் திடமாய் பெற்றிருந்தார். இதனினும் அவர் பெற்ற பெருநன்மை வேறேதும் உண்டோ!!!!

இயேசு பெருமானின் திருச்செய்தியைத் தமிழ் மக்களிடத்து பரப்புவதற்கு அரும்பாடு பட்டவர் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் ஆவார்.

**டாக்டர். வசந்த கல்யாணி டேவிட்**
கணிணி அறிவியல் பேராசிரியர்
**சு.பொன்மலர்,** ஆராய்ச்சி அறிஞர்,
அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம்